அ.வ.எண்.55/2016

பிடபிள்யு.1

கு.வி. (ராஜகோபால்)

எனக்கு பூர்வீகம் திருச்சி மாவட்டம் எறக்குடி ஆகும். எறக்குடியில் எனக்கு வீடு மற்றும் நிலங்கள் உள்ளது. அந்த வீடு, நிலங்களுக்கு பட்டா பெற்றுள்ளேன். தாவா சொத்திற்கான பட்டா என் பெயரில் தான் உள்ளது அந்த வருவாய் ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். பட்டாவை எனது முன்னோர்கள் தான் வாங்கினார்கள் அது குறித்து எனக்கு தெரியாது. எந்த தேதி, மாதம், வருடம் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து தெரிந்து கொண்டேன். அதில் தாவா சொத்துக்கள் அனைத்தும் இனாம் வகைப்பாட்டில் சேர்ந்தது எனவும், அது மதுரைவீரன், கருப்பண்ணசாமி பரிவார தேவதைகள் பெயரில் பட்டா உள்ளதாக தெரிவித்துள்ளார்கள் என்றால் சரிதான். 1924 ம் வருடத்திய அ பதிவேட்டில் தாவா சொத்தானது மதுரைவீரன், கருப்பண்ணசாமி பெயரில் தான் பதியப்பட்டுள்ளது என்றால் சரிதான். 8 சொத்துக்களுக்கும் அவ்வாறு தான் பதியப்பட்டுள்ளது. தாவா சொத்திற்கும் கீழபுறம் ஒரு கல் மண்டபம் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் கீழ்புறம் நான்முகன் சித்த வைத்திய சாலை என்று உள்ளதா என்றால் உள்ளது. நான்முகன் சித்த வைத்திய சாலைக்கு கீழ்புறத்தில் மதுரைவீரன், கருப்பண்ணசாமி, ஆண்டவர் உள்ளிட்ட பரிவார தேவதைகளின் கோவில் உள்ளது என்றால் சரிதான். நான் குறிப்பிட்டுள்ள 8 சொத்துக்களில் மதுரைவீரன், கருப்பண்ண சாமி கோவில் சொத்துக்களும் நான்முகன் சித்த வைத்திய சாலை மற்றும் 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ள அவர் மகன் குடியிருக்கும் 14 க்கு 20 அளவுள்ள சொத்தும் அடங்கும். நான் இதுநாள்வரை தாவா சொத்திற்கான பட்டா கருப்பண்ணசாமி, மதுரைவீரன் பரிகார தேவதைகள் பெயரில் அமைந்துள்ளது என்று சொல்லி பட்டா மாற்றம் கோரி எந்த மனுவும் வருவாய் துறைக்கு கொடுக்கவில்லை. குறிப்பாக 1ம் வாதி பெயரில் தாவா சொத்தை பொருத்து வருவாய் துறையிலிருந்து எந்த பட்டாவும் பெறவில்லை என்றால் சரிதான்.

தாவா சொத்துக்கள் மற்றும் அதை சேர்ந்த சொத்துக்கள் அனைத்தும் மதுரைவீரன், கருப்பண்ணசாமி கோவிலுக்கு சொந்தமான சொத்துக்கள் என்பதால் தான் வருவாய் துறையிலிருந்து பட்டா நானோ, எனது மூதாதையர்களோ பெற முடியவில்லை என்றால் சரியல்ல. தனபாக்கியத்தம்மாள் சுப்பையா பிள்ளை மற்றும் 5 நபர்களிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளார். சுப்பையா பிள்ளை மற்றும் 5 நபர்களும் சொத்தை கிரையம் செய்து கொடுத்த போது என்ன ஆவணங்கள் கொடுத்தார்கள் என எனக்கு தெரியாது என்றால் சரிதான். தனபாக்கியத்தம்மாள் கிரையம் பெற்ற சொத்தின் பத்திரத்தை நான் பார்த்துள்ளேன். அந்த பத்திரம் எங்கு வைத்துள்ளேன் என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 04.09.1968 தேதியிட்ட கிரைய பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 04.09.1968 தேதியிட்ட ஆவணம் மோசடியான ஆவணம் என்றும், அதில் எந்தவித ஆவணங்களையும் முன்னிலைப்படுத்தாமல் கோவில் சொத்தை மோசடி செய்ய வண்ேடும் என்பதற்காக தனபாக்கியத்தம்மாள் பத்திரம் தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தனபாக்கியத்தம்மாளுக்கு கிரையம் செய்து கொடுத்த சுப்பையா பிள்ளை வகையறாவிற்கே சொத்தில் எந்தவித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 பத்திரத்தின் அசல் எங்கு உள்ளது என்றால் அசல் என்னிடம் உள்ளது. அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு குறிப்பிட்ட காரணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் தாவா சொத்து இனாம் புஞ்சை என கண்டுள்ளதா என்றால் கண்டுள்ளது. ஆனால் தாவா சொத்திற்கு அடுத்து தான் நஞ்சை உள்ளது. தனபாக்கியத்தம்மாள் எனது சமூகத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ல் கண்டுள்ள சீனிவாசன் வகையறா - வாதிகள் எனது சமூகத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.11ல் குறிப்பிட்டுள்ள குமாரசாமி ஆசாரியாரும், செல்வரத்தின ஆசாரியும் எனது சமூகத்தை சார்ந்தவர்கள் தான். 1973ல் நடந்த வழக்கில் கருப்பண்ணசாமி, மதுரைவீரன் கோவில் மற்றும் இந்து அறநிலையத்துறையை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. அந்த வழக்கில் வாதி,

பிரதிவாதிகள் அனைவரும் ஒரே சமூகத்தை சார்ந்தவர்கள் என்பதால் எங்களுக்குள் கூட்டாக சதி செய்து வழக்கு தாக்கல் செய்து சொத்தை அபகரிக்க முயற்சி செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.11 தீர்ப்புரை மட்டும் தாக்கல் செய்துள்ளோம் என்றும் தீர்ப்பாணையில் தான் சொத்து விவரம் இருக்கும் என்றும், அந்த தீர்ப்பாணையை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த வழக்கின் தீர்ப்பாணை எங்கு உள்ளது என்றால் அது என்னிடம் இல்லை. தீர்ப்புரை மட்டும் தான் உள்ளது. வா.சா.ஆ.11 தீர்ப்புரைக்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11 வழக்கானது 1990ல் தான் கடைசியாக முடிந்தது என்றால் சரிதான். மருதமுத்து 1914ல் தான் தாவா சொத்திற்கு வந்தார். 1977லிருந்து மருதமுத்து தாவா சொத்தில் உள்ளார் என்றும் அவரை வேண்டுமென்றே வா.சா.ஆ.11 வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. மருதமுத்து தரப்பினராக இல்லை என்பதால் வா.சா.ஆ.11 தீர்ப்புரை மருதமுத்துவை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் புது சர்வே எண்.49 ஆகும். தாவா சொத்தின் பழைய சர்வே எண். தெரியாது. தாவா சொத்தின் இனாம் புஞ்சை பழைய சர்வே எண்.97/1 மற்றும் 97/2 என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அந்த பழைய சர்வே எண்ணின் நடப்பு சர்வே எண் ஆனது 109/1 மற்றும் 109/2 என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. சொத்தில் எந்த உரிமையும் இல்லாததால் தான் சர்வே எண் பொருத்து என்னால் எதுவும் சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. நான் பிராதில் சொல்லியுள்ளது போல் அறங்காவலர் செயல் கூட்டத்தை எந்த வருடம் கூட்டினேன் என்றால் 2010ல் கூட்டினேன். அறங்காவலர் கூட்டம் சம்மந்தமான நாளிதழில் விளம்பரம் செய்தோமா என்றால் நாளிதழில் விளம்பரம் செய்யவில்லை எங்கள் சமூகத்தை சார்ந்தவர்களை வைத்து கூட்டம் போட்டோம். 2010க்கு முன்பாக கூட்டம் கூட்டினோமா என்றால்ந ான் கூட்டாததால் அது குறித்து எனக்கு தெரியாது. 2010ல் கூட்டம் கூட்டியது சம்மந்தமாக நோட்டு ஆவணங்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த 2010 நோட்டினை வழக்கில் தாக்கல் செய்யாதது குறித்து எந்தவித காரணமும் இல்லை என்றால்

சரிதான். கூட்ட முறைகள் குறித்து முறைபடி தனிக்கை துறையில் கொடுத்து கணக்கு பெற்றுள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் டிரஸ்டு எதுவும் இல்லை என்றும் கூட்டம் எதுவும் கூட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் அது குறித்து எந்த ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 ல் அறங்காவலர் டிரஸ்டு என வார்த்தைகள் உள்ளதா என்றால் இல்லை. திருவிழாவிற்கு வந்தவர்களிடம் கூட்டம் போட்டு கையொப்பம் வாங்கினேன். வா.சா.ஆ.10 2018ல் அவசர கதியில் தயாரித்ததால் டிரஸ்டு என்ற வார்த்தை போடாமல் அவசர கதியில் தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.10 ஆவணத்திற்கும்வ ழக்குரையில் குறிப்பிட்டுள்ள தலைப்புகளுக்கும் (cause title) எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து சமயபுரம் கண்ணனூரில் கடைவீதி என்ற பகுதியில் அமைந்துள்ளது என்றாலும், அதை வாரி சந்து மேற்கு என சொல்வார்கள் என்றாலும் சரிதான். சமயபுரம் கண்ணனூருக்கு நுழையும் பகுதியில் அர்ச்சு உள்ளதை மெயின்ரோடு என்று சொல்வார்கள் என்றால் சரிதான். மெயின் ரோட்டில் உள்ள ஆர்ச்கும் , வழக்கு சொத்திற்கும் இடையே 1/2 கி.மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். தாவா சொத்திற்கும், மெயின் ரோட்டிற்கும் இடத்தில் தெப்பகுளம் , காய்கறி சத்திரமும் உள்ளது என்றால் சரிதான். காய்கறி சத்திரமும், கருப்பண்ணசாமி பெயரில் தான் உள்ளது. காய்கறி சத்திரத்திலிருந்து, நான்முகன் சித்த வைத்திய சாலை என்று குறிப்பிட்டுள்ள இடம் வரை கருப்பண்ணசாமி பெயரில் தான் பட்டா உள்ளது. வா.சா.ஆ.10ல் தாவா சொத்திற்கு சம்மந்தம் இல்லாத மெயின்ரோடு என்ற வாசகத்தை குறிப்பிட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் தண்ணீர் பந்தல், தர்ம சேவை எதுவும் நான் செய்யவில்லை என்றும் அதனால் சொத்து மெயின் ரோட்டில் உள்ளதா வாரி சந்து மேற்கில் உள்ளதா என்றும் தெரியாமல் வா.சா.ஆ.10 தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சமயபுரம் கண்ணனூர் மாரியம்மன் கோவில் தேர் திருவிழா கண்ணனூரில் தான் மண்டகப்படி நடக்கும் என்றால் சரிதான். ஆதி மாரியம்மன் கோவில் உள்ள சமயபுரத்திற்கும் ,

சமயபுரம் கண்ணனூரில் உள்ள மாரியம்மனுக்கும் இடையே 2 கி.மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சொத்து வரி சமயபுரம் கண்ணனூர் பேரூராட்சியிலிருந்து வழங்கப்பட்டது என்றால் சரிதான். ஆதி மாரியம்மன் கோவில் சமயபுரம் ஊராட்சியில் வரும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது கண்ணனூரில் தான் வரும் சமயபுரத்தில் வராது. வா.சா.ஆ.8 பொதுவாக அன்னதானம் செய்யக்கூடிய யார் மனு கொடுத்தாலும் அவர்களுக்கு அதனை கொடுத்துவிடுவார்கள் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.8 குறிப்பாக வழக்கு தாக்கல் செய்த காலத்திற்கு 2013 மற்றும் 2014 க்கு வாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8ல் உணவு பாதுகாப்பு தரச்சான்று என கண்டுள்ளது என்றால் சரிதான். 2006லிருந்து 2013 வரை என் பெயரில் வா.சா.ஆ.8 ஐ போல் சான்று எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். 2013லிருந்து 2018 வரை நான் என் பெயரில் எந்த சான்றும் வாங்கவில்லை என்றால் சரியல்ல வாங்கியுள்ளேன். 2014லிருந்து 2018 வரை வா.சா.ஆ.8 போல் உள்ள சான்றிதழ் எங்கு உள்ளது என்றால் என்னிடம் தான் உள்ளது. அதனை வழக்கில் தாக்கல் செய்யாததற்கு காரணம் எதுவும் இல்லை. வா.சா.ஆ.8 ல் குறிப்பிட்டுள்ளது போல் அன்னதானம் எதுவும் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8ல் டிரஸ்டி என குறிப்பிடவில்லை என்றால் சரிதான் டிரஸ்டி என போடமாட்டார்கள். ராஜகோபால் என்று எழுதப்பட்ட எழுத்திற்கும் வாரி சந்து மேற்கு என்று எழுதப்பட்ட எழுத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரியல்ல. இரண்டிற்கும் வித்தியாசம் உள்ளது என்றும் ராஜகோபால் என்ற பெயர் செயற்கையாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தரப்பில் தாக்கல் செய்த வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 அஞ்சல் ஒப்புகை அட்டையில் மருதமுத்து பெயர் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4ல் பூங்கொடி என்றும் வா.சா.ஆ.5 ல் மணிபூங்கொடி என்றும் எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு அவ்வளவு தூரம் படிக்க தெரியாது. மருதமுத்துவிற்கு அறிவிப்பு அனுப்பாமல் எங்களுக்கு வேண்டியவரை வைத்து அறிவிப்பு அனுப்பி வழக்கை தாக்கல் செய்துள்ளேன்

என்றால் சரியல்ல. வழக்குரையில் குறிப்பிட்டுள்ள வா.சா.ஆ.3 அறிவிப்பு எதுவும் மருதமுத்துவிற்கு அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் டிரஸ்டி என்பதற்கு இந்து அறநிலையத்துறையில் எந்த சான்றிதழும் வாங்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 முதல் 7 ரசீதுகளை சமயபுரம் கண்ணனூர் பேரூராட்சியில் எனது செல்வாக்கை பயன்படுத்தி தலைவர் விஷ்வ கர்ம மகாஜன சங்க சத்திரம் என ரசீது பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ள 1ம் வாதியின் பெயரான ஸ்ரீ மாரியம்மன் ரதோஸ் த்வ தேர் திருவிழா பஞ்சபிரகார உற்சவ விஷ்வ பிரமாண பொது ஜன சமாராதனை தண்ணீர் பந்தல் தர்மம் என்பதும், விஷ்வ கர்ம மகாஜன சங்க சத்திரம் என்பதும் வெவ்வேறு என்று சொன்னால் சரியல்ல இரண்டும் ஒன்று தான். இரண்டும் ஒன்று என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. விஷ்வ கர்ம மகாஜன சங்க சத்திரம் என்பது வேறு என்றும் 1ம் வாதி வேறு என்றும் வழக்கிற்காக இரண்டும் ஒன்று என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.7 வரையுள்ள ஆவணத்திற்கும், வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.8 லும் 1ம் வாதியின் பெயர் குறித்து எந்த குறிப்பும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் குறிப்பிட்டுள்ள பெயரை வழக்குரையில் தலைப்பில் குறிப்பிடவில்லை என்றும், அதனால் வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் 2010லிருந்து 2019 வரை அன்னதானம் செய்துவருகிறேன். அன்னதானம் செய்வதற்கு மருதமுத்து இடையூறு எதுவும் செய்யவில்லை என்று சொன்னால் அன்னதானத்திற்கு பந்தல் போடுவதற்கே பிரச்சனை செய்வார். இடையூறு செய்த போது அன்னதானம் எப்படி செய்தேன் என்றால் அவரை கேட்டு தான் பின்னிட்டு செய்தேன். அதுபோல் வெள்ளி குதிரை வாகனமும் தாவா சொத்தில் வருடம் வருடம் இறங்கி வருகிறது என்றால் சரிதான். வெள்ளி குதிரை இறக்குவதற்கு மருதமுத்து தகராறு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். சாமி வந்து இறங்கிய பிறகு மருதமுத்துவும் சேர்ந்து வழிபடுவார் என்றால் சரிதான். வழிபடுவது சம்மந்தமாக எந்த கருத்து வேறுபாடும்

ஏற்படாது. தாவா சொத்தில் நான் சொல்வது போல் டிரஸ்டு எதுவும் கிடையாது என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சமயபுரம் கண்ணனூர் ஸ்ரீமாரியம்மன் என்ற வாசகமும், திருநாள் என்ற வாசகமும் வழக்குரையில் குறிப்பிடாததால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல்செ சய்துள்ள ஆவணம் தேர் திருவிழாவிற்கானது என்றும் பஞ்சபிரகார திருவிழாவனது எப்போது நடக்கும் என்றால் வைகாசி 1ம் நாள் நடக்கும், பஞ்சபிரகார திருவிழா சம்மந்தமாக எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பஞ்சபிரகாரம் என்பது வேறு, தேர் திருவிழா என்பது வேறு என்றால் சரிதான். தனபாக்கியத்தம்மாள் பத்திர நடவடிக்கையில் வீட்டு குடித்தனம் என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். வழக்குரையில் நான் தற்காலிக அறங்காவலர் என்று நானே குறிப்பிட்டுள்ளேன் என்றும் அதுபோல் அரசு அனுமதி பெற்ற ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தனபாக்கியத்தம்மாள் வீட்டு குடித்தனம் என்பதால் சமயபுரம் கண்ணனூர் கருப்பண்ணசாமி மதுரை வீரன் பரிவார தேவதைகள் தாவா சொத்தை அடைய வேண்டும் என்பதற்காக சுயஆர்ஜிதமாக சம்பாதித்ததாக பொய்யாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கோவில் இனாம் சொத்தை பொருத்து நான் எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எதுவும் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனக்கோ, தனபாக்கியத்திற்கோ அவருக்கு விற்பனை செய்தவருக்கோ தாவா சொத்தில் எந்த பாத்தியமும் கிடையாது என்றும் இந்து அறநிலையத்துறைக்கு பாத்தியப்பட்ட சொத்தினை பிரதிவாதி மீது தாக்கல் செய்யும் வழக்கை கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொருத்து 1ம் பிரதிவாதி சட்டப்படியான குடியிருப்பாளர் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் என்ன மேல் கூரை அமைத்துள்ளார் என்றால் நாங்கள் போட்டது தான் உள்ளது. நாங்கள் மேல் கூரை எதுவும் போடவில்லை என்றும் பத்திரத்தில் காலி மனை என உள்ளது என்றும் 1ம் பிரதிவாதி போட்ட மேல் கூரையை எங்களுடையது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியும் அந்த

சொத்திலிருந்து தர்மங்கள் செய்துவருகிறார் என்றும் பிரதிவாதியை காலி செய்வதற்காக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியை அத்துமீறி காலி செய்ய முயற்சித்ததால் தான் ஆவணங்களை கண்டறிந்து தாக்கல் செய்துள்ளார் என்றும் பிரதிவாதியை அத்துமீறி காலி செய்ய உரிமையில்லை என்றால்சரியல்ல. இந்த வழக்கிற்கு வழக்குமூலம் கிடையாது என்றும் நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.